**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–6**

**மேல்நிலைத் துணைத்தேர்வு, செப்டம்பர்/அக்டோபர் 2017**

**தனித்தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவினை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்துக்கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்த**

**செய்திக்குறிப்பு**

நடைபெற்ற, செப்டம்பர் 2017 மேல்நிலை துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் (துட்கல் தனித்தேர்வர்கள் உட்பட) தத்தமது தேர்வு முடிவினை, தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே **31.10.2017** அன்று (செவ்வாய்கிழமை) பிற்பகல் தாங்களே இணையதளத்திலிருந்து தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

அதற்கான வழிமுறைகள் பின்வருமாறு:

1. தனித்தேர்வர்கள் வருகிற **31.10.2017** (பிற்பகல்) முதல் தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. மேற்படி இணையதள முகவரிக்குள் Login செய்தவுடன்

   **“ Provisional Mark Sheet**
   **HSE Result – September 2017”**

   என்ற Screen தோன்றும். தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்ததேதி ஆகிய விவரங்களை பதிவு செய்ய வேண்டும். மேலும் Screen-ல் தோன்றும் குறியீட்டினை (Code) அதில் உள்ளது போலவே Type செய்ய வேண்டும்.

3. அதன் பின்பு View Result என்ற Option –ஐ Click செய்ய வேண்டும். அப்போது தேர்வர்களது பதிவெண் பெயரில் ஒரு pdf file பதிவிறக்கம் ஆகும். மேற்படி கோப்பில் தேர்வருக்கான தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் இருக்கும். அதனை தேர்வர்கள் print எடுத்துக் கொள்ளலாம்.

4. மேற்கண்ட முறையில் தேர்வர்கள் தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விடைத்தாள் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

செப்டம்பர் 2017 தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு 02.11.2017 காலை 11.00 மணி முதல் 04.11.2017 வரை நேரில் சென்று உரிய கட்டணத்தினை பணமாகச் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**விடைத்தாள் நகல் (Copy of the Answer Sheet) பெறுவதற்கான கட்டணம்:**

| | | |
|---|---|---|
| பகுதி – I மொழி | – | ரூ.550/– (இரு தாட்களுக்கு) |
| பகுதி – II மொழி (ஆங்கிலம்) | – | ரூ.550/– (இரு தாட்களுக்கு) |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.275/– |

**மறுகூட்டல் (Re-totalling) கட்டணம் :**

| | | |
|---|---|---|
| பகுதி – I மொழி, பகுதி – II மொழி (ஆங்கிலம்) மற்றும் உயிரியல் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.305/– (இரு தாள் பாடங்கள்) |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |

ஒம்/–
**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

சென்னை–6
தேதி: 30.10.2017